செய்திப் பணிப்பாளர்/ செய்திப் பதிப்பாசிரியர் 21.09.2016

# செய்தி வெளியீடு
# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; ஓகஸ்ட் 2016
## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
## தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமர. சத்தரசிங்ஹ அவர்கள், 2016 ஓகஸ்ட் இற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் 2016 யூலையில் இருந்த 5.8% இலிருந்து 4.5% ஆக வீழ்ச்சியடைந்துள்ளதெனத் தெரிவித்தார். 2016 ஓகஸ்ட் இல் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளில் இருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்பு முறையே 1.84%, 2.61% ஆகும்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 ஓகஸ்ட் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 ஓகஸ்ட் இற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 113.3 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (யூலை) சுட்டெண்ணான 115.2 உடன் ஒப்பிடுகையில் 1.9 சுட்டெண் புள்ளி வீழ்ச்சி மற்றும் 1.6 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 1.8% வீழ்ச்சியினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.1% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

யூலை 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 ஓகஸ்ட் இற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 1.8% வீழ்ச்சியைக் காட்டுகிறது. கடந்த மாதம் (யூலை) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, பச்சை மிளகாய், சீனி, தேங்காய், நெத்தலிக் கருவாடு, அரிசி, மைசூர் பருப்பு, சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, தேசிக்காய், பெரிய வெங்காயம், கோதுமை மா என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே உணவுப் பொருட்களின் பெறுமதி வீழ்ச்சிக்குக் காரணமாகும். எனினும் வாழைப்பழம், முட்டை, பப்பாசி, உடன் மீன், மாம்பழம், கோழி இறைச்சி என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (யூலை) உடன் ஒப்பிடும்போது விலை அதிகரிப்புக் காணப்படுகிறது.

யூலை 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 ஓகஸ்ட் இற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.1% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் 'போக்குவரத்து', 'மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு', 'உடையும் காலணியும்', 'உணவு விடுதியும் ஹோட்டல்களும்' என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். 2016 ஓகஸ்ட் 1 ம் திகதியில் இருந்து செயல்வலுப்பெறும் வகையில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையால் 'போக்குவரத்து' பிரிவின் செலவுப் பெறுமதியில் அதிகரிப்புக் காணப்படுகிறது. எனினும் 'தொடர்பாடல்', 'சுகாதாரம்', 'வீடு, நீர், மின், எரிவாயு, ஏனைய எரிபொருள்' ஆகிய பிரிவுகளில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வற் வரி நீக்கம் காரணமாக செலவினப் பெறுமதியில் அதிகரிப்பு காணப்படுகிறது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 'கேளிக்கை மற்றும் கலாச்சாரம்' பிரிவின் செலவுப் பெறுமதியில் மிகச் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது. 'கல்வி' பிரிவின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2015** | ஓகஸ்ட் | 108.4 | -0.5 | 1.9 |
| | செப்ரெம்பர் | 108.4 | 0.0 | 1.9 |
| | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020